**O.S. No.323/2018**

**Deposition of P.W. 1**

**Dated : 02.06.2026**

**Name : திரு.பரமசிவம்**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

16 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நைனார் குமாரிடம் இருந்து ஸ்டாலின் விலைக்கு வாங்கும்போது வயலாக இருந்தது என்றால் சரிதான். 16 வது பிரதிவாதி வயலினை மாற்றி அந்த இடத்தில் கட்டிடம் கட்டினார் என்றால் சரிதான். வயல் பகுதியை சாலை மட்டத்திற்கு உயர்த்துவதற்கு மண் அடித்து உயர்த்தினார் என்றால் தெரியாது. கட்டிடம் கட்டுவதற்கு நாகர்கோயில் நகராட்சி வரைபடம் தாக்கல் செய்து அனுமதி வாங்கி கட்டிடம் கட்டி உள்ளார் என்றால் தெரியாது. கட்டிடம் கட்டும்போது எங்களுடைய சமுதாயத்தை சேர்ந்த சிறிய மற்றும் பெரிய கட்சிக்காரர்கள் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் தெரியாது. நான் மற்றும் மற்ற வாதிகள் 2 முதல் 12 ஆகியோர்கள் கட்டிடம் கட்டுவதற்கு ஆட்சேபணை செய்தார்களா என்றால் இல்லை. 16 வது பிரதிவாதியின் மகள் திருமணம் வழக்கு கட்டிட சொத்தில் 23.11.2012 ஆம் தேதி பந்தல் போட்டு பெரிய அளவில் நடந்தது என்றால் தெரியாது. எதிர்வழக்குரை தாக்கல் செய்தபின்பு அதுகுறித்து விசாரித்தேனா என்றால் இல்லை. 16 வது பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதற்கு நாங்கள் ஆட்சேபணை செய்தோமா என்றால் பட்டா மாற்றம் தெரியாது. எதிர்வழக்குரையில் அதுகுறித்து தெரிவித்தபின்பும் பட்டா மாற்றம் குறித்து வருவாய்த்துறையினருக்கு ஆட்சேபணை தெரிவித்தோமா என்றால் இல்லை. பிரமாண

வாக்குமூலத்தில் 15 மற்றும் 16 வது பிரதிவாதிகள் முறையான கிரையதாரர்கள் அல்ல என எவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் கோயில் அவசியத்திற்கு சொத்து விற்காததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். வழக்கு சொத்து தொடர்பான அ.வ.எண்.796/2004 வழக்கின் படி சொத்தினை யாரும் வாங்ககூடாது என நாளிதழில் பொதுஅறிவிப்பு கொடுத்தாமோ என்றால் இல்லை. அந்த வழக்கில் 8 வது பிரதிவாதியான 15 வது பிரதிவாதிக்கு எதிராக சொத்தை விற்ககூடாது என இடையுறுத்து கட்டளை பெறவில்லை என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவகத்தில் வழக்கு சொத்து குறித்து பத்திரங்கள் பதிய கூடாது என ஆட்சேபணை கொடுத்திருந்தோமா என்றால் இல்லை. அதனால் 16 வது பிரதிவாதிக்கு அ.வ.எண்.796/2004 வழக்கு நிலுவையில் இருந்தது தெரியாது என்றால் சரியல்ல. அதனால் 16 வது பிரதிவாதி தகுந்த பிரதிபலன் கொடுத்து கிரையம் வாங்கியுள்ளார் என்றும், அதனால் வழக்கு கிரையத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் மற்றும் மற்ற வாதிகள் 16 வது பிரதிவாதி கட்டிடம் கட்ட கூடாது என எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். 16 வது பிரதிவாதிக்கு டிரஸ்ட் act sec.96 ன்படி அவருடைய கிரையம் செல்லும் என்றும், சட்டத்தின்படி அவருக்கு சலுகைகள் பெற தகுதியுடையவர் என்றால் சரியல்ல. 16 வது பிரதிவாதி மற்ற பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் பிரதிவாதிகள் குறிப்பிட்ட எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை பொய்யானது என மறுத்து பிரமாண வாக்குமூலத்தில் சாட்சியம் அளிக்க தகுதி இல்லை என்றால் சரியல்ல. அதனால் வழகது 16 வது பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி

செய்யப்பட வேண்டும் என்றும், 16 வது பிரதிவாதிக்கு எதிராகவோ அவர் கிரையம் வாங்கிய வழகக்கு சொத்து குறித்தோ எந்தவித பரிகாரமும் பெற தகுதியில்லை என்றால் சரியல்ல.

(1 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)